செ.வெ.எண்: 31 நாள்: 10.03.2017

## பத்திரிகைச்செய்தி

9 மாதம் முடிவடைந்த குழந்தைகள் முதல் 15 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி வழங்கும் முகாம் மார்ச் 1 முதல் 15ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுவரை (10.03.2017) புதுக்கோட்டை மாவட்டத்தில் 2,60,000 குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகள், புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி வழங்கப்படும்.

மேலும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் புதுகை ஸ்டார், பிவெல், டீம் ஸ்பெசுஷாலிட்டி, செந்தில் மருத்துவமனை மற்றும் வைத்தீஸ்வரா ஆகிய தனியார் மருத்துவமனைகளில் தடுப்பூசி வழங்கப்படுகிறது.இது வரை தடுப்பூசியினை தங்களது குழந்தைகளுக்கு போடாத அனைத்து பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளை மேற்கண்ட முகாம் நடைபெறும் இடங்களுக்கு அழைத்துச் சென்று தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசியினை போட்டுக் கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்தடுப்பூசியினை போட்டுக் கொள்ள எவ்வித அச்சமும் கொள்ள தேவையில்லை. எவ்வித பக்க விளைவுகளும் இல்லாத மிகவும் பாதுகாப்பான இத்தடுப்பூசியினை வழங்குவதன் மூலம் குழந்தைகளின் நலன் பாதுகாக்கப்படுகிறது.

மேற்காணும் தகவலை சுகாதாரப்பணிகள் துணை இயக்குநர் மரு.பரணீதரன் (புதுக்கோட்டை) அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**